ஊராட்சி ஒன்றியம்
21 JAN 2022

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - சிவகங்கை மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஊராட்சி செயலர் திரு.சி.மதியழகு என்பவரின் மனைவி திருமதி.ம.கவிதா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை</u>**

**அரசாணை (3ப) எண்.38**

**நாள் 10.12.2021.**
**பிலவ, கார்த்திகை 24,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

வளர்ச்சிப்பிரிவு
7 JAN 2022

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.ப்பி3/17012/2020, நாள்: 15.12.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.10514/2021/டி3, நாள்: 16.06.2021.

----------

<u>ஆணை:</u>

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில்,

..2

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தில், பிரான்மலை ஊராட்சியில், ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 14.09.2020 அன்று காலமான திரு.சி.மதியழகு என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.ம.கவிதா என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 17.12.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படியும், மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.ம.கவிதா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 16.09.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 27.05.1983 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 37 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்து இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.ம.கவிதா என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 17.12.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 15.11.2021-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.19094/ட்டி.1/2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.35841/ஜி.1/2021-1, நாள்: 26.11.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K.கோபால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
திருமதி.ம.கவிதா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, சிவகங்கை மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.

<u>நகல்:</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
மனிதவள மேலாண்மை துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.ப்ப3/17020/2020, நாள்: 11.1.2022

சார்பு செய்யப்படுகிறது.

பிரிவு அலுவலர்.

பெறுநர்:

திருமதி.ம.கவிதா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
எஸ்.புதூர்,
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)